செ.வெ.எண்: 18/2021 நாள்: 08.09.2021

**திருப்பூர் மாவட்டத்தில் வருகின்ற ஞாயிற்றுக்கிழமை (12.09.2021) அன்று 18 வயதிற்கு மேற்பட்ட 1,06,200 நபர்களுக்கு கொரோன தடுப்பூசி வழங்க திட்டமிடப்படடுள்ளது**

**திருப்பூர் மாவட்டத்தில் 631 மையங்களில் கோவிட் - 19 சிறப்பு தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளதுமாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

திருப்பூர் மாவட்டத்தில் கோவிட்-19 நோயின் தாக்கம் கடந்த இரண்டு அலைகளின் போதும் அதிக பாதிப்பை எற்படுத்தி உள்ளது எனவே பொதுமக்களை நோயின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் வருகின்ற ஞாயிற்றுக்கிழமை (12.09.2021) அன்று கோவிட்-19 சிறப்பு தடுப்பூசி முகாம் நடத்தப்படவுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் 18 வயதிற்கு மேற்பட்டவற்களின் எண்ணிக்கை 20,77,095 இதுவரை 10,58,704 நபர்கள் முதல் தவனையும் 1,98,647 நபர்களுக்கு இரண்டாம் தவனை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. 10,18,391 நபர்களுக்கு முதல் தவனையும் 43,187 நபர்களக்கு இரண்டாம் தவனை தடுப்பூசி செலுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே வருகின்ற ஞாயிற்றுக்கிழமை ( 12.09.2021) அன்று 1,06,200 நபர்களுக்கு தடுப்பூசி வழங்க திட்டமிடப்படுள்ளது.

கோவிட் - 19 சிறப்பு தடுப்பூசி முகாம், 631 மையங்களில் காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை அரசு மருத்துவமமைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், ஊட்டசத்து மையங்கள், பள்ளிக்கூடங்கள்,பஞ்சாயத்து அலுவலகங்கள், ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், டோல்கேட் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கோவிட் - 19 தடுப்பூசி மருந்து இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இப்பணிக்காக 2,480 பல்வேறு துறைகளைச் சார்ந்த பணியாளர்கள், மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபடவுள்ளனர். இதற்கு தேவையான மருந்துகள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்**